பக்கங்கள் 19+9

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 14 வெள்ளிக்கிழமை 30.08.2024 | அதிர்வு 29

## யாழ். பல்கலையில் இன்று போராட்டம்!




(விரிவான செய்தி 5ஆம் பக்கத்தில்)

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# சர்வதேச நீதி கோரி தமிழர் தாயகத்தில் உறவுகள் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தினமான இன்று, தமிழர் தாயகத்தில் சர்வதேச நீதி கோரி கவனயீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதில் காணாமல் ஆக்கப்பட்வர்களின் உறவுகள் பெருமளவில் பங்கேற்றனர்.

அந்தவகையில், யாழ்ப்பாணத்தில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், ஆரியகுளம் சந்தியில் இன்று முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமான பேரணி பருத்தித்துறை வீதி - ஆஸ்பத்திரி வீதி - காங்கேசன்துறை வீதி ஊடாக முனியப்பர் கோயிலடியை அடைந்தது.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பதற்குச் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி பேரணி இடம்பெற்றது.

பேரணியின்போது, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தீச்சட்டி ஏந்திச் சென்றதுடன், பேரணியின் முடிவில் அக்கினி சாட்சியாக தமக்கான நீதி கிடைக்கும் வரையில் போராட்டங்களை தொடர்வோம் என்று உறுதி எடுத்தனர்.

பேரணியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், சிவில் சமூகத்தினர், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.






# பொலிஸ் இடையூறுக்கு மத்தியிலும் திருமலையில் உறவுகள் போராட்டம்

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

(வி.ரி.சகாதேவராஜா)

சர்வதேச காணாமல் ஆக்கப்பட்டோர் தினத்தையொட்டி திருகோணமலையில் இன்று வெள்ளிக்கிழமை காணாமல் ஆக்கப்பட்டோரின் அமைப்பு போராட்டத்தை முன்னெடுத்தது.

திருகோணமலை கடற்கரையில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் கிழக்கின் மூன்று மாவட்டங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் பஸ்களிலும் ஏனைய மார்க்கங்களிலும் வந்து சேர்ந்து திருமலை கடற்கரையில் ஒன்றுகூடி மூன்று மாவட்ட தலைவிகளின் தலைமையில் போராட்டத்தை நடத்தினர்.

அதனைத் தடுக்கப் பொலிஸார் பலத்த முயற்சி எடுத்தனர். அப்போது அங்கே வாய்ப் போராட்டம் இடம்பெற்றது. அதன்போது ஒரு இளைஞர் கைது செய்யப்பட்டார். அவர் விடுதலை



செய்யப்பட வேண்டும் என்று தொடர்ச்சியாக திருகோணமலை கடற்கரையில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினார்கள். அதன்பின்னர் மேற்படி இளைஞர் விடுதலை செய்யப்பட்டார்.

இருந்த போதிலும் பொலிஸாரின் தலையீடு கூடுதலாக இருந்த காரணத்தால் ஆண்கள் சிலர் துன்புறுத்தப்பட்டார்கள்.

போராட்டத்தில் கலந்துகொண்ட சமூகச் செயற்பாட்டாளர்கள் நேரடியாக திருகோணமலையிலுள்ள இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவில் தமக்குப் பொலிஸார் அச்சுறுத்தல் விடுத்தனர் என்று முறைப்பாடு செய்தார்கள்.

இறுதியாக அவர்கள் திருகோணமலை குரு முதல்வர் அருட்பணி றொபின்சனிடம் மகஜரைச் சமர்ப்பித்தனர்.









## நீதிபதிக்கு எதிராகக் கொழும்பில் சுவரொட்டி:

# மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தினர் 2ஆவது நாளாகவும் பணிப்பகிஷ்கரிப்பு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராகவும் அவருக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் கொழும்பில் ஒட்டப்பட்ட அநாமதேய சுவரொட்டிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் குறித்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யக் கோரியும் இரண்டாவது நாளாகவும் இன்று வெள்ளிக்கிழமை மன்னார் நீதிவான் நீதிமன்ற சட்டத்தரணிகள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

இதன் காரணமாக இன்று அழைக்கப்பட்ட அனைத்து வழக்கு விசாரணைகளும் பிறிதொரு தினத்துக்குத் தவணை இடப்பட்டுள்ளது.

மன்னார் மேல் நீதிமன்றத்துக்கு முன்பு இன்று மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி இ.கயஸ்பெல்டானோ தலைமையிலான சட்டத்தரணிகள் ஒன்றுகூடி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதன்போது மன்னார் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி இ.கயஸ்பெல்டானோ ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த 12 வருடங்களுக்கு முன்னர் மன்னார் மேல் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவம் தொடர்பாக சுமார் 52 பேர் வரை கைது செய்யப்பட்டு கடந்த 12 வருடங்களாக வழங்கு விசாரணை இடம்பெற்று நேற்று வியாழக்கிழமை குறித்த வழக்கு விசாரணை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

இந்தநிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை குறித்த வழக்கு விசாரணை தொடர்பாக கொழும்பில் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதியின் புகைப்படம் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் அவருக்கு எதிராக ஒட்டப்பட்டுள்ளன. சிங்கள மொழியில் அவருக்கு எதிராக வசனங்கள் அந்தச் சுவரொட்டிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மேற்படி வழக்கு விசாரணைகள் உரிய முறையில் இடம்பெற்று வந்துள்ள போதும் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட குறித்த நடவடிக்கைக்கு எதிராக நேற்று வியாழக்கிழமையும், இன்று வெள்ளிக்கிழமையும் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளோம்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நாங்கள் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்டுள்ளோம்.

எனவே, உரிய அதிகாரிகள் மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதிக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டவர்களைக் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.” – என்றார்.





# மன்னாரில் புதிதாகத் திறக்கப்படவுள்ள மது விற்பனை நிலையத்துக்கு எதிர்ப்பு

மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி, 2ஆம் கட்டைப் பகுதியில் புதிதாக திறக்கப்படவுள்ள மது விற்பனை நிலையத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பிரதேச மக்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் இன்று வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன் பதாகைகளை ஏந்தியவாறு எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மன்னார் நகர பகுதியில் ஏற்கனவே ஒரு மது விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி 2ஆம் கட்டை பகுதியில் புதிய மது விற்பனை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில் மக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் பல்வேறு எதிர்ப்புக்களைத் தெரிவித்து வந்தனர்.

இந்தநிலையில், மன்னார் பிரதேச செயலகம் எவ்வித அனுமதியும் வழங்காத நிலையில் தற்போது கொழும்பில் அனுமதி பெற்று இன்னும் சில தினங்களில் குறித்த மது விற்பனை நிலையத்தைத் திறக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக தாங்கள் அண்மையில் மன்னர் மது வரித் திணைக்களத்துக்குச் சென்று கேட்ட போது அவர்களும் புதிதாகத் திறக்கப்படவுள்ள மது விற்பனை நிலையத்துக்கு ஆதரவாகத் தம்மோடு கடும் தொனியில் கதைத்தனர் என்றும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தற்போது மன்னார் – தலைமன்னார் பிரதான வீதி, 2ஆம் கட்டை பகுதியில் புதிய மது விற்பனை நிலையம் திறக்கப்படவுள்ள நிலையில் அதனைச் சுற்றி மக்களின் குடியிருப்புகள் அமைந்துள்ளன.

அங்கு மது விற்பனை நிலையம் திறக்கப்பட்டால் அந்தப் பகுதியில் பல்வேறு கலாசார சீர்கேடுகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளது என்றும், உடனடியாக குறித்த மது விற்பனை நிலையத்தை அங்கிருந்து அகற்ற வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இல்லையேல் மாவட்டம் தழுவிய ரீதியில் ஒரு சில தினங்களில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், தமது கோரிக்கை அடங்கிய மகஜரை மன்னார் மாவட்ட அரச அதிபருக்குக் கையளிக்கும் வகையில் மாவட்ட செயலக அதிகாரிகளிடம் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் சமர்ப்பித்தனர்.












### காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டி

# யாழ். பல்கலையில் இன்று போராட்டம்!

**(எஸ்.நிதர்ஷன்)**

சர்வதேச வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தினமான இன்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்கு முன்னால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண்டி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகளை ஏந்தி, வாய்களைக் கறுப்புத் துணியால் கட்டி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், ஊழியர் சங்கத்தினர் ஆகியோர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## உண்மைகளை மறைத்து தீர்வைக் காண முடியாது

இன்று வெள்ளிக்கிழமை (ஓகஸ்ட் 30 ஆம் திகதி) வலிந்து காணாமல் ஆக்கப்படும் கொடூரங்களால் பாதிக்கப்பட்டோருக்கான சர்வதேச தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கும் நாள்.

உலகெங்கும் காணாமல்போன பல்லாயிரக் கணக்கானோர் மற்றும் அவர்கள் பற்றிய தகவல்களுக்காக காத்துக்கொண்டிருக்கும் அவர்களது உறவினர்களின் துயரம் குறித்துக் கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தத் தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

முரண்பாடுகள் மற்றும் அமைதியீனத்தைக் கையாள்வதற்காக சில நாடுகளில் ஆள்களைக் கட்டாயமாக கடத்தி அல்லது வேறு வழியில் காணாமல் போகச் செய்யும் நடைமுறை இன்னமும் மேற்கொள்ளப்படுவதை, இந்தத் தினத்தில், ஐ நா கண்டித்திருக்கிறது.

இலங்கையில் இப்படி ஆள்கள் பல்லாயிரக் கணக்கில் வல்வந்தமாகக் கடத்தப்பட்டுக் காணாமல் போகச் செய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று தெரியாமல் பதினைந்து ஆண்டுகளுக்கும் மேல் உறவுகள் காத்துக் கிடக்கின்றன.

"இலங்கையில் சகல சமூகங்களையும் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் காணாமல்போன தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கொள்வதற்காக நீண்டகாலமாகக் காத்திருக்கின்றார்கள். அவர்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு இடமளிக்கும் அதே வேளை, அவர்களது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது எனும் உண்மையைக் கண்டறிவதற்குரிய சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும்." - என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இன்றைய சர்வதேச தினத்தை ஒட்டி வெளியிட்ட அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

நாட்டில் யுத்தம் ஓய்ந்து விட்டது. குண்டு சத்தங்களும், பீரங்கி முழக்கங்களும், போர் அழிவுகளும், பேரழிவுகளும், அனர்த்தங்களும் முடிவுக்கு வந்து விட்டன என்பது உண்மைதான்.

ஆனால் அமைதி வந்து விட்டதா? சமாதானம் ஏற்பட்டு விட்டதா? நல்லிணக்கம் - புரிந்துணர்வு - இன சௌஜன்யம் - சுபீட்சம் - வந்துவிட்டனவா?

இல்லை. அவை வருவதற்கான சாத்தியமும் இல்லை.

ஆயுத அடக்கு முறையின் உச்சத்தில் போர் ஒருதரப்பினால் வெற்றிகொள்ளப்பட்டிருக்கின்றது. தோற்ற தரப்பு நிர்மூலமாக்கப்பட்டு, அடக்கப்பட்டு இருக்கின்றது. அதனால் சன்னங்கள் சீறவில்லை. வேட்டுக்கள் பாயவில்லை. குண்டுகள் வெடிக்கவில்லை. பீரங்கிகள் முழங்கவில்லை. அதன் காரணமாக நிசப்தம் நிலவுகின்றது. ஆயினும் அதன் அர்த்தம் அமைதி அல்ல. சமாதானம் அல்ல. புரிந்துணர்வு அல்ல. நல்லிணக்கம் அல்ல. இன சௌஜன்யம் அல்ல.

ஆயுத அடக்கு முறையின் உச்சத்தில் நிலவும் அமானுஷ்ய அமைதி இது. எச்சந்தர்ப்பத்திலும் இது உண்மையான - நிரந்தரமான - உறுதியான - நின்ற, நிலைத்து, நீடிக்கக் கூடிய சமாதானமே அல்ல.

புரிந்துணர்வின் அடிப்படையில் - மீள் நல்லிணக்கத்தின் பெறுபேறாக - அமைதி மலர வேண்டும். சமாதானம் நிலை பெற வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்?

பொய்மையை இட்டுக்கட்டி, உண்மைகளை மூடி மறைத்து, அதன் மீது நல்லிணக்கத்தையோ புரிந்துணர்வையோ, இன சமரசத்தையோ ஏற்படுத்திவிட முடியாது. இதை ஆட்சிக் கட்டில் இருப்பவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பலவந்தமாக ஆள்கள் காணாமலாக்கப்பட்ட விவகாரத்துக்கு தீர்வு காண்பதற்கு முதலில் உண்மைகள் வெளிவர வேண்டும். சட்டத்தின் முன் நிறுத்தல், பொறுப்புக் கூறல், தண்டனை, இழப்பீடு வழங்கல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல் என்பனவெல்லாம் அதன் பின்னால் தேவையானால் முன்னெடுக்கலாம். முதலில் உண்மை வெளிப்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் உண்மைகளை மூடி மறைத்துக் கொண்டு, அதன் மூலம் அதிகாரத்தைத் தக்க வைத்துத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் தென்னிலங்கை அரசு, பலவந்தமாக ஆள்கள் காணாமலாக்கப்பட்ட விடயத்திலும் நடந்த உண்மைகளை மூடி மறைத்து விட்டு, இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று கனவு காண்கின்றது.

உண்மையை மூடி மறைத்து இந்த பிரச்சினைக்கு தீர்வு காணவே முடியாது என்ற உண்மையை இத்தரப்புகள் உணர்ந்தால்தான் இப்பிரச்சினைக்குத் தீர்வும் சமரசமும் சாத்தியப்படும்.



tamil one
SV MEDIA
SV MEDIA
FREE ENTRY ◆ FREE PARKING
MEGA BLAST
BIGGEST SUMMER EVENT
2024
CELEBRATING SOUTH ASIAN TASTE AND CULTURE
7 - 8 Sept 2024
Scarborough Fair Ground
Morningside & Finch
FOR MORE INFO
647-993-9291 | 437-872-6257
416-436-1010



# மருதமுனை நூலகத்தில் "வாசிக்கும் மலர்கள்"

(அஸ்லம் எஸ்.மௌலானா)

மருதமுனை பொது நூலகத்தில் "வாசிக்கும் மலர்கள்" எனும் சிறுவர் சிறப்பு நிகழ்வு நேற்று வியாழக்கிழமை (29) பிற்பகல் நூலகர் ஹரீஷா சமீம் தலைமையில் நடைபெற்றது.

சிறுவர்களின் கல்வி மற்றும் அறிவை விருந்தி செய்யும் வகையில் கல்முனை மாநகர சபை நிர்வாகத்துக்கு உட்பட்ட நூலகங்களில் சிறுவர் பகுதிகள் மேம்படுத்தப்பட வேண்டும் என்று மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் விடுத்திருந்த அறிவுறுத்தலுக்கு அமைவாக உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீமின் ஆலோசனை, வழிகாட்டலில் இந்த நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதன் பிரகாரம் நூலகங்களின் செயற்பாட்டை வினைத்திறன் மிக்கதாகவும் சிறுவர்களை வாசிப்பின்பால் ஈர்ப்பதற்காகவும் சிறுவர்களை, நூலகத்தோடும் நூல்களோடும் தொடர்பு படுத்துவதற்காகவும் தமது நூலகத்துக்கு வருகைதந்து வாசிக்கும் ஒரு தொகுதி சிறுவர்களை ஒன்றிணைத்து இந்த சிறப்பு நிகழ்வு வடிவமைக்கப்பட்டிருந்தது.

இதன்போது தாம் வாசித்த கதைகள், நகைச்சுவைகள், பாடல்கள் மற்றும் அறிவுசார் தகவல்களை அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

சிறுவர்களை கவர்ந்து மகிழ்வுறச் செய்த இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சிறுவர்களுக்கு நூலக உத்தியோகத்தர்கள் அன்பளிப்பு பொதிகளுடன், இனிப்புகளையும் வழங்கி பாராட்டினர். இந்த நிகழ்வுக்கு மசோ எனும் நிறுவனம் அனுசரணை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# மரக்குற்றி விழுந்ததில் ஒருவர் உயிரிழப்பு!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கைர் ஜும்மா பள்ளிவாசலுக்கு அருகாமையில் அமைந்துள்ளது மரக்காலையில் நேற்று வியாழக்கிழமை (29) கனரக வாகனத்தில் இருந்து மரக் குற்றியை இறக்கும் போது ஒருவர் மீது குறித்த மரக்குற்றி விழுந்ததில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் மொனராகலை பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய ரசி குமார் என்பவரே உயிரிழந்துள்ளார் என்று சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் காணப்படுகிறது.

சம்பவம் தொடர்பான மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.






# மலையகத் தந்தை எனப் போற்றப்படும் தொண்டமானின் ஜனன தினம் இன்று!

(பொகவந்தலாவ எஸ். சதீஸ் )

மலையகத்தின் தந்தை' எனப் போற்றப்படும் பெருந்தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 111 ஆவது ஜனன தினம் இன்று (30) வெள்ளிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

கொழும்பு பழைய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள அவரது உருவச் சிலைக்கு இ.தொ.காவின் பிரதிநிதிகள் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவர்கள், உப தலைவர்கள், முன்னாள் பிரதேச சபை தலைவர்கள், உறுப்பினர்கள் உட்பட இ.தொ.கா முக்கியஸ்தர்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிகழ்வின் பின்னர் இ.தொ.காவின் தலைமையகமான சௌமியபவனின் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.

அத்துடன், கொட்டகலையில் உள்ள சி.எல்.எப். வளாகம் உட்பட மலையக பகுதிகளிலும் ஜனன தின நிகழ்வுகள் இடம்பெற்றன.

சுதந்திர இலங்கையில் உருவான முதலாவது நாடாளுமன்றத்தில் உறுப்பினராக அங்கம் வகித்தவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான். இலங்கை, இந்திய காங்கிரஸ் உருவாக்கத்துக்கு முக்கிய பங்களிப்பு வழங்கிய அவர் அதன் தலைவராகவும் செயற்பட்டுள்ளார். இலங்கை – இந்திய காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக பெயர் மாற்றம் பெற்றது முதல் அதன் தலைவராக செயற்பட்டவர்.











# ஒலுவில் மாணவர்களுக்கு போதைத் தடுப்பு பயிற்சி நெறி

(எஸ்.அஷ்ரப்கான்)

மாணவர்களுக்கான தலைமைத்துவ மற்றும் போதைப்பொருள் தடுப்புக்கான ஒருநாள் பயிற்சி நெறி நேற்று (29) வியாழக்கிழமை மல்வத்தை விபுலானந்த மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.



ஒலுவில் அல் ஹம்றா மகா வித்தியாலய மாணவர்கள் 35 பேர் இந்தப் பயிற்சி நெறியில் கலந்து கொண்டு சான்றிதழ்களையும் பெற்றனர்.

பொலிஸ் கெடட் பிரிவின் பணிப்பாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான சிந்தக குணரத்னவின் தலைமையில் மற்றும் நேரடி மேற்பார்வையில், பயிற்சி மற்றும் உயர் பயிற்சி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சஜீவ மெதவத்த வழிகாட்டலில் மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி மற்றும் போதைப்பொருள் தடுப்புக்கான ஒருநாள் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

இதில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கலந்து கொண்டு மாணவர்களுக்குத் தலைமைத்துவம் சம்மந்தமான பெறுமதியான விடயங்களை முன்வைத்தார்.

இந்தப் பயிற்சி நெறியானது பொலிஸ் கெடட் பிரிவின் கட்டளைத் தளபதியின் மேற்பார்வையின் கீழ் பொலிஸ் கெடட் தலைமையகம் மற்றும் பொரலந்த பொலிஸ் கெடட் பயிற்சி நிலையத்தின் பொலிஸ் கெடட் ஆலோசகர்களால் நடாத்தப்பட்டது.

இந்தப் பயிற்சி நெறிக்கு செல்வதற்கு நெறிப்படுத்தலை மேற்கொண்ட இணைப்பாடவிதானத்திற்கு பொறுப்பான பிரதி அதிபர் ஜே.வஹாப்தீன், கல்லூரியின் முதல்வர் அஷ்ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீம், பாடசாலையின் கெடட் பிரிவுக்கு பொறுப்பான ஆசிரியர் லெப்டினன் ஏ.எம்.எம்.கியாஸ் மற்றும் பாடசாலையின் பிரதி, உதவி அதிபர்களுக்கும் மற்றும் பயிற்சிகளை வழங்கும் சுதர்சன், பாடசாலையின் கெடட் குழுவின் சி.கியூ. சறாபத் இஸ்னி ஆகியோருக்கும் பாடசாலை சமூகம் நன்றிகளைத் தெரிவித்துள்ளது.








# ரணிலின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் மலையக மக்களின் 200 வருட கனவு!

## கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவிப்பு

(பொகவந்தலாவ எஷ்.சதீஷ்)

மலையக மக்களின் 200 வருட கனவை நனவாக்கும் விடயம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஒன்றிணைந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன் போது மேலும் கருத்து தெரிவித்த கல்வி இராஜாங்க அமைச்சர்,

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனமானது முழு நாட்டுக்கும் ஏற்றவாறும் முழு நாட்டையும் துரிதகதியில் அபிவிருத்தி செய்யும் நோக்கில் இருக்கிறது.

மலையகப் பெருந்தோட்ட மக்களைப் பொருத்தவரையில் 200 வருட கால கனவை நனவாக்கும் விடயம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மலையக மக்களின் வாழ்க்கை முறைமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும் ஒரு கொள்ளைப் பிரகடனமாக அமைந்துள்ளது.



இதுவரையிலும் இந்த நாட்டில் பல்வேறு ஜனாதிபதி தேர்தல்கள் இடம்பெற்றுள்ளன. அவ்வப்போதும் தேர்தல் பிரகடனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. எந்த ஒரு கொள்கை பிரகடனத்திலும் இது போன்ற ஒரு கொள்கைப் பிரகடனம் வெளியிடப்பட்டதில்லை. இது குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மலையக மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் வெளியிடப்பட்ட கொள்கை பிரகடனத்தை முழுமையாக ஏற்றுக்கொள்கின்றோம். அதுமட்டுமன்றி ஜனாதிபதி ரணில் விக்ரசிங்கவின் வெற்றிக்காக முழுமூச்சாக செயற்படுவோம்.

தற்போதய ஜனாதிபதி கல்வி துறையை மேம்படுத்துவதற்கு எவ்வாறான செயற்பாடுகளை கொண்டுள்ளார் என்பதை அனுபவ ரீதியாக நான் அறிந்துள்ளேன். இதுவரையிலும் எந்த ஒரு ஜனாதிபதியும் காட்டாத அக்கறையைக் கல்வித் துறையில் வெளிக்காட்டியிருக்கிறார். நாடு முன்னேறுவதற்கு கல்வி அடித்தளமாக அமைகிறது .

இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்த நாட்டில் ஒரு இருண்டயுகம் காணப்பட்டது. அந்த இருண்ட யுகத்தைக் குறுகிய காலத்தில் சீர்செய்த பெருமை தற்போதய ஜனாதிபதி அவர்களுக்கு உள்ளது.

இந்த ஜனாதிபதித் தேர்தலில் 39 வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர். அதில் அனுபவம் வாய்ந்த ஒரே ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்ரமசிங்க மாத்திரமே என்பதை அனைவரும் புரிந்துக்கொள்ள வேண்டும். ஆகையால் அவரின் வெற்றி தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது . இவரின் வெற்றியூடாக முழு இலங்கையும் முந்நோக்கி நகரும் என்பதில் எவ்வித மாற்றுக்கருத்துமில்லை. இதில் குறிப்பிட்டப்பட்டுள்ள அனைத்து விடயங்களையும் செயற்பாடுகள் ஊடாக காட்டுவதற்கு பாரிய பொறுப்புள்ளது எதிர்வரும் செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி முதல் அவரின் செயற்பாடுகள் இந்த நாட்டின் முன்னேற்றத்துக்காக இயங்கும் என்ற எதிர்பார்ப்பு எமக்கு உள்ளது.- என்றார்.



# கற்றலுக்கு உதவி வழங்கல்

(தலவாக்கலை)

கெயார் லங்கா அறக்கட்டளையின் அனுசரணையில் தலவாக்கலை கிறேட் வெஸ்டன் பாடசாலைக்கு அதன் ஆசிரியர் கேதீஸ் ஊடாக வெண்பலகைகள் மற்றும் பச்சை நிற பலகைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளை சீராக மேம்படுத்துவதற்காக இவ்வெண்பலகைகள் கெயார் லங்கா அறக்கட்டளையின் நிறுவனர் அர்ஜுன் ஜெயராஜ் மற்றும் அதன் உறுப்பினர் தயாளன் ஆகியோரால் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்படும்!

## அட்டாளைச்சேனை தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் சஜித் வாக்குறுதி

(இஸட்.ஏ.றஹ்மான் )

மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்படும் என்று ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரான சஜித் பிரேமதாஷ தெரிவித்துள்ளார்.

புதனன்று அட்டாளைச்சேனை அஷ்ரஃப் பொது விளையாட்டு மைதானத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் சட்டத்தரணி எஸ்.எம்.ஏ. கபூர் தலைமையில் மாபெரும் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீன், மற்றும் நடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம். ஹரீஷ், பைசால் காசீம், முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா, ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் எம்.ஐ.ஏ.ஆர். புகாரி மற்றும் கட்சிகளின் அமைப்பாளர்கள் உயர் பீட உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.



இதன்போது ஐக்கிய மக்கள் சக்தியின் பொத்துவில் தொகுதி அமைப்பாளர் எம்.ஐ.ஏ.ஆர். புகாரயால் பிரதேச மக்களின் முக்கிய கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது.

ரவூப் ஹக்கீம் மற்றும் றிஷாத் பதியுதீன் ஆகியோருடன் கலந்து ஆலோசிக்கப்பட்ட பின்னர் அதில் குறிப்பிடப்பட்ட விடயங்களை தான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் நிறைவேற்றி வைப்பேன் என்று உறுதி அளித்தார்.

1.தென் கிழக்கு பல்கலைக்கழகத்தில் வைத்திய பீடத்தை ஆரம்பித்தல்.

அதற்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையை போதனா வைத்தியசாலை ஆக தரமுயர்த்தல்.

2 .நுரைச்சோலை கரும்புக் காணிகளுக்கு உறுதிப் பத்திரம் வழங்கல்.

3.நுரைச்சோலையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட வீடுகளை உரியவர்களுக்கு வழங்குதல்.

4. ஒலுவிலில் அமைந்துள்ள துறை முகத்தை உரிய முறையில் மீனவர் துறைமுகமாக மாற்றியமைத்தல்.

5. சாகாமம் நெற்காணிகளுக்கு உரிய நீர்ப்பாசன திட்டத்தை மத்திய அரசின் கீழ் கொண்டு வந்து அதனைச் சீர் செய்தல்.

6. சம்புக்களப்பு நீர் வடிச்சல் திட்டத்தைப் பூர்த்தி செய்தல்.

7. களியோடை வாய்க்காலின் இருமருங்கிலும் நல்ல முறையில் அணைக் கட்டுகள் அமைத்தல்.

8.அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை விளையாட்டு மைதானங்களைப் பூரணப் படுத்தப்பட்ட மைதானங்களாக அமைத்தல்.

9.வட்டமடு விவசாய நெற் காணிகளை உரிய விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல் போன்ற கோரிக்கைகள் அடங்கிய மகஜரே கையளிக்கப்பட்டது.



# பொது வேட்பாளர் விடயத்தை முன்வைத்து நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட்டுள்ளனர்!

**ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் சந்திரகுமார் தெரிவிப்பு**

(பழுவூரான்)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பார் என்று எமது ஜனாதிபதி வேட்பாளர் உறுதி வழங்கியுள்ளார். இந்த நிலையில் பொது வேட்பாளர் விடயத்தை முன்வைத்து இந்த முறையும் நல்ல சந்தர்ப்பம் ஒன்றை நழுவ விட்டுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் ப. சந்திரகுமார் தெரிவித்தார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வூடகச் சந்திப்பு மட்டக்களப்பிலுள்ள கட்சி அலுவலகத்தில் நேற்று வியாழக்கிழமை (29) இடம்பெற்றது.

அவர் அங்கு கருத்துத் மேலும் குறிப்பிட்டதாவது,

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காண்பதாக எமது ஜனாதிபதி வேட்பாளர் உறுதி வழங்கியுள்ளார். மாகாண சபை ஊடாக வடக்கு கிழக்கு மக்களுக்குத் தேவையான அதிகாரங்




களை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார். அதேவேளை மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ, வடக்கு, கிழக்கை இணைக்க மாட்டேன், அவர்களுக்கு உரிய அதிகாரங்கள் எதுவும் வழங்க மாட்டேன் எனவும் கூறிய நிலையில் தமிழ் மக்களின் வேண்டுகோளின் பேரில் அவர்களின் விருப்பங்களை அறிந்து அவர்களுக்கு வேண்டிய முக்கிய பணிகளை முன்னெடுப்பதற்காகவே நான் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ளேன்.

இதேவேளை கடந்த கால நல்லாட்சி அரசில் பிரதான கட்சியாக இருந்த தமிழரசுக் கட்சி ஜனாதிபதி மைத்திரிபாலவிடம் இருந்து எதனையும் பெற்றுக் கொள்ள முடியவில்லை. தற்போதுள்ள ஜனாதிபதியிடம் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வேண்டிய சலுகைகளைப் பெற்றுக் கொண்டுள்ள படியினால் அவரது அடிமைகள் ஆகியுள்ளனர். இதில் சிதறியுள்ள சில பாராளுமன்ற உறுப்பினர்கள் அவர்களது வருமானத்துக்காக இந்தப் புது வேட்பாளர் என்ற வேலைத் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இது ஒரு தேவையற்ற விடயமாகும்.

வருகின்ற ஜனாதிபதியிடம் தங்களது வேண்டுகோள்களை முன்வைத்து மக்களுக்கு வேண்டிய தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகள் தங்களது கோரிக்கைகளை வெல்லவிருக்கும் ஜனாதிபதியிடம் முன்வைத்து சமூக நலனுக்காக பாடுபடும்போது தமிழ் தரப்பினர் இந்தப் பொது வேட்பாளர் விடயத்தை முன்வைத்து இம்முறையும் நல்ல சந்தர்ப்பம் ஒன்றை நழுவ விட்டுள்ளனர்.– என்றார்.





# குப்பைகளால் அசிங்கப்பட்டு வருகிறது கிண்ணியா – தம்பலகாமம் பிரதான வீதி

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் கிண்ணியா பிரதான வீதியின் கிண்ணியா, தம்பலகாமம் எல்லையை பிரிக்கும், முள்ளியடி 'சிவப்பு பாலம்' அருகில் கழிவுப் பொருள்கள் கொட்டப்படுகின்றன. இங்கு கொட்டப்படும் குப்பையில் பிளாஸ்டிக் மற்றும் உடைந்த கண்ணாடி போத்தல்கள் உள்ளிட்ட ஆபத்தான பொருள்களும் உள்ளன. இவ்வாறு குப்பைகள் கொட்டப்படுவதால் அந்தப் பகுதியில் துர்நாற்றம் விசுகிறது. இதனால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

கழிவுப் பொருள்களை முறையாகவும் சீராகவும் கையாள்வதற்கும், திண்மக் கழிவு முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தத் தவறும் பட்சத்திலும் 'சிவப்பு பாலம்' சுற்றுச்சூழல் பகுதி குப்பைகளால் அழிவுறும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளது.

'சிவப்பு பாலம்' சுற்றுச்சூழல் கழிவுகளைக் கொட்டும் பூமி அல்ல. அதற்கு இடமளிக்கப்படக் கூடாது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் பொது மக்கள் உட்பட கிண்ணியா பிரதேச சபை மற்றும் தம்பலகாமம் பிரதேச சபை ஆகிய அரச துறையினர் உள்ளிட்ட அனைவரும் பொறுப்புணர்ந்து செயற்படுவது அவசியம்.

குறித்த பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் நடப்பட்ட "கிண்ணியா" எனும் பிரதான பெயர் பலகையும் பல மாத காலமாக காணாமல் போயுள்ளது. இதனால் கிண்ணியா எல்லையைக் காண்பது கடினமாக உள்ளது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மரபுக் கவிதை நூல் வெளியீட்டு விழா!

(எம். எப். நவாஸ்)

சுவிற்சர்லாந்து பாவலர்மணி திருமதி சரளா விமலராசாவின் மரபுக் கவிதை நூல்கள் வெளியீட்டு விழா இறைபணிச் செம்மல் த. கைலாயபிள்ளை தலைமையில் சுவாமி விபுலானந்தா சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் முன் இந்து இளைஞர் மன்ற கேட்போர் கூடத்தில் இன்று சனிக்கிழமை இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துகொள்ளவுள்ளார். முதல் பிரதியையும் பெறவுள்ளார்.

அதிதிகளாக நாடாளுமன்ற உறுப்பினர் ரீ.கலையரசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவீந்திரன் கோடீஸ்வரன், அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவ. ஜெகராசன், பிரதேச செயலாளர் உட்பட ஏனைய அதிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை ஸ்ரீமத் நீலமாத வானந்தஜீ மகராஜ், சிவஸ்ரீ புண்ணிய கிருஷ்ண குமார குருக்கள் ஆகியோர் வழங்குவர்.

மேலும் நூல்கள் அறிமுக உரையை ஓய்வு நிலை அதிபர் கவிஞர் கனக சூரியம் யோகானந்தம், திருகோண மலை வலய உதவிக் பணிப்பாளர் ஏ. எல். கிதுர் முஹம்மது ஆகியோரால் ஆய்வுரை வழங்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வின் போது பாட்டரசர் புகழ் கலிவிருத்தம், பனங்காட்டு அந்தாதி, சிந்து பாடுவோம், விருத்த மாயிரம் மரபுக் கவிதை போன்ற நுல்கள் வெளியிடப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது.



# மட்டக்களப்பு திருப்பழுகாமம் சிவன் மஹாகும்பாபிஷேகம்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு, திருப்பழுகாமம் ஸ்ரீ கௌரி அம்பாள் சமேத கேதீஸ்வரநாதர் (சிவன்) ஆலயப் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்ட பக்ஷ மஹா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை (30) காலை இடம்பெற்றது.

ஆலய நுழைவாயில் கோபுரம், மணிக்கோபுரம், தூபி மற்றும் பரிபால தெய்வங்களுக்கும் பக்த அடியார்கள் புடைசூழ, வேதபாராயணங்கள் முழங்க நிகழ்த்தப்பட்டது.

இந்த மஹா கும்பாபிஷேகப் பெரு விழாவைப் பிரதிஷ்டா பிரதமகுரு, சிவாசாரிய திலகம், மதுர சாதகர், தேவி பூஜா துரந்தரர் சிவஸ்ரீ கேதீஸ்வரப் பவித்திரக் குருக்கள் தலைமையில் சாதக வேந்தன் சிவஸ்ரீ பால துஸ்யந்தக் குருக்கள், வேத சுரபி சிவஸ்ரீ கேதீஸ்வர ஹரிஹர குருக்கள், பிரம்ம ஸ்ரீ தர்ஷன் சர்மா, பிரம்ம ஸ்ரீ பிரபு ஷர்மா, பிரம்ம ஸ்ரீ தனுஷன் ஷர்மா, சிவஸ்ரீ சுதாகரக் குருக்கள், சிவஸ்ரீ சதா பரணிதரக் குருக் கள், சிவஸ்ரீ பால பிரதீபக் குருக்கள், சிவஸ்ரீகெ.மாதவக் குருக்கள் மற்றும் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ க.கு. சிறிதரசர்மா ஆகியோர் இணைந்து நிகழ்த்தினர்.

இப் பெருவிழாவினைக் காண மட்டக்களப்பு மாவட்டத்தின் நாலா பக்கமும் இருந்து அடியவர்கள் வருகை தந்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து 11 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். எதிர்வரும் 11 ஆம் திகதி 1008 சங் குகளால் சங்காபிஷேகம் மற்றும் பாற்குடப் பவனியும் நடைபெறும். கும்பாபிஷேக மலரும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.








# அபிவிருத்திக் கலந்துரையாடலும் உபகரணங்கள் வழங்கி வைப்பும்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள வைத்தியசாலைகளின் அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடும் பொருட்டு, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகல வைத்திய சாலைகளதும் அபிவிருத்திக் குழுக்களை சந்தித்து வருகின்றார்.

அந்தவகையில் மத்திய முகாம் பிரதேச வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாக அந்த வைத்திய சாலையின் அபிவிருத்திக் குழுவினர் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி டாக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீனை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

தற்போது வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்கள், தேவைகள் மற்றும் குறைபாடுகளைக் கேட்டறிந்து கொண்ட பிராந்தியப் பணிப்பாளர் அபிவிருத்திக் குழுவால் முன்வைக்கப்பட்ட தேவைகளில் சில வற்றை நிவர்த்தி செய்து தருவதாகவும் உறுதியளித்தார்.

அத்துடன் அந்த வைத்தியசாலையில் அவசரத் தேவையாக காணப்பட்ட சக்கர நாற்காலியையும் வைத்தியசாலை பொறுப்பதிகாரியிடம் பிராந்திய பணிப்பாளர் கையளித்ததுடன் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவுக்கான தற்காலிக அனுமதியும் வழங்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிரும் கலந்து கொண்டார்.





# திருகோணமலையில் “முதல் கனவு” கன்னி கவிதை நூல் வெளியீட்டு விழா

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை தமிழ் அமுதம் கலை வட்டத்தின் ஏற்பாட்டில் கவிஞர் மன்னனூர் பாரதி எழுதிய வளர்ந்து வரும் ஈழத்து எழுத்தாளர் கழகத்தின் வெளியீடான “முதல் கனவு” கன்னி கவிதை நூல் வெளியீட்டு விழா திருகோணமலை நகரசபை பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தமிழ் அமுதம் கலை வட்டத்தின் தலைவியான பாவலர் “சம்பூரணி” தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கலைஞர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





# பாலத்தில் மோதியதில் பஸ் விபத்து; ஆற்றில் விழுந்து பயணிகள் காயம்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கொழும்பு – கதிர்காமம் பிரதான வீதியின் தங்காலை மரகொல்லிய பாலத்தில் இன்று வெள்ளிக்கிழமை (30) அதிகாலை 4 மணியளவில் இடம் பெற்ற பஸ் விபத்தில் 7 பேர் படுகாய மடைந்துள்ளனர்.

ஹம்பாந்தோட்டையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளானது.

பஸ்ஸின் அதிவேகத்தை சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் போனதால், பஸ் பாலத்தில் மோதி விபத்துக்குள்ளானது. பஸ்ஸின் முன் இடது பகுதி சேதமடைந்துள்ளது.

பஸ் பாலத்தில் மோதியவுடன், பஸ்ஸில் இருந்த 5 பயணிகளும் ஆற்றில் விழுந்த நிலையில் காயமடைந்துள்ளனர். இவர்களுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர். பொதுமக்கள் அவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.



# மட்டக்களப்பு - திருமலை தங்கங்களின் 29 ஆவது வருடாந்தக் கிரிக்கெட் சமர்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி கல்விச் சமூகம் 29 ஆவது தடவையாக ஒழுங்கு செய்துள்ள திருகோணமலை ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்து கல்லூரிக்கும், மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா தேசிய கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் சமர் இன்று (31) சனிக்கிழமை திருகோணமலை ஆர். கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

திருகோணமலை இந்து கல்லூரி அதிபர் எஸ். கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள சமரில் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் கே.சிவகுமார் பிரதம அதிதியாகவும், திருகோணமலை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் என்.பரமேஸ்வரன் கௌரவ அதிதியாகவும், சிறுவர் கல்வி உதவிகள் அம்ப்பின் சர்வதேச இணைப்பாளர் எஸ். கங்காதரன் மற்றும் கனடா சி.ஈ.டீ. கிங் குறூப் பணிப்பாளர் பெஞ்சமின் லோரன்சுப்பிள்ளை ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.






# கடத்தியவருக்கும் குழந்தைக்கும் இடையில் நடந்த

# பாசப்போராட்டம்!

## பெற்றோரிடம் செல்ல மறுத்த குழந்தை

## பார்ப்போரை நெகிழ வைத்த தருணம்

தன்னைக் கடத்தியவரை விட்டுப் பிரிய மனமில்லாமல் குழந்தை ஒன்று கதறி அழுத வீடியோ சமூக வலைதளங்களில் பரவி வருகின்றது.

உத்தரப் பிரதேச மாநிலம் ஆக்ராவைச் சேர்ந்தவர் தலைமைக் காவலர் தனுஜ் சாஹர். தற்போது காவல் துறையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார், உத்தரப் பிரதேச மாநில காவல்துறையின் சிறப்புப் பிரிவு மற்றும் கண்காணிப்புப் பிரிவு ஆகியவற்றில் பணியாற்றியுள்ளார்.

இவர் கடந்த 14 மாதங்களுக்கு முன்பு ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் வசித்து வரும் தனது உறவினர் ஒருவரின் 11 மாத ஆண் குழந்தையைக் கடத்தியுள்ளார். இந்தக் கடத்தல் சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்திய பொலிஸார், தனுஜ் சாஹரை வலைவீசித் தேடி வந்தனர்.

அதேவேளை, தனுஜ் சாஹர் தனது தோற்றத்தை மாற்றி நீளமான தாடி மற்றும் தலைமுடியை வளர்த்துள்ளார். உத்தரப் பிரதேசத்தின் மதுரா மாவட்டத்தில் யமுனை நதிக்கரையில் குடிசை அமைத்து, துறவி போல் வேடமிட்டு வாழ்ந்து வந்துள்ளார். அவர் கடத்திச் சென்ற குழந்தையை தனது மகன் என்று கூறி வளர்த்து வந்துள்ளார்.

இதனிடையே தனுஜ் சாஹரின் இருப்பிடம் குறித்து பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதையடுத்து கடந்த 27ஆம் திகதி காவல்துறை சிறப்புப் படையினர் தனுஜ் சாஹர் தங்கியிருந்த



இடத்திற்குச் சென்று அவரை மடக்கிப் பிடித்தனர். மேலும் அவரிடமிருந்து குழந்தையையும் மீட்டனர்.

இதையடுத்து, மீட்கப்பட்ட குழந்தையின் பெற்றோர் ஜெய்ப்பூர் காவல் நிலையத்திற்கு வரவழைக்கப்பட்டனர். அப்போது அந்தக் குழந்தை, தன்னைக் கடத்திச் சென்ற தனுஜ் சாஹரை விட்டுப் பிரிய மனமில்லாமல் கதறி அழுதது. தனுஜ் சாஹரும் குழந்தையைக் கட்டிப்பிடித்து அழத் தொடங்கினார்.

அவரிடமிருந்து குழந்தையை வலுக்கட்டாயமாகப் பிரித்து அதன் பெற்றோரிடம் ஒப்படைத்த பொலிஸார், தனுஜ் சாஹரைக் கைது செய்து அழைத்துச் சென்றனர்.

கைதுக்கு முன் நடந்த இந்தப் பாசப்போராட்டம் தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகின்றது.

அதனைப் பார்க்கும் பலர், தனுஜ் அந்தக் குழந்தையை நல்ல முறையில் வளர்த்துள்ளார் எனக் கருத்துப் பதிவிட்டு வருகின்றனர்.

அதேவேளை, 11 மாதக் குழந்தையைக் கடத்தி, பெற்றோரிடமிருந்து குழந்தையை 14 மாதங்கள் பிரித்து வைத்திருந்த தனுஜ் சாஹருக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும் எனவும் பலர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

# நடுவானில் விமானம் குலுக்கம்
# பயணிகள் கடும் நடுக்கம்
# அவசரமாக தரை இறக்கம்




அமெரிக்காவில் நடுவானில் விமானம் குலுங்கியதில் 7 பேருக்கு படுகாயம் ஏற்பட்டது. இதனால் அங்கு பெரும் பரபரப்பான சூழல் நிலவியது.

மெக்சிகோவின் கான்கன் விமான நிலையத்திலிருந்து அமெரிக்காவின் சிக்காக்கோ நகருக்கு யு.ஏ-1196 என்ற பயணிகள் விமானம் புறப்பட்டது.

போயிங் 737-900 விமான நிறுவனத்துக்குச் சொந்தமான அந்த விமானத்தில் ஊழியர்கள் உட்பட 179 பேர் பயணித்தனர்

லூசியான் நகரம் அருகே சென்றபோது அந்த விமானம் திடீரென நடுவானில் குலுங்கியது. அப்போது பயணிகள் தங்களது இருக்கைகளிலிருந்து நகர்ந்து முன் இருக்கைகள் மீது மோதினர். இதனால் பயந்து நடுங்கிய பயணிகள் கத்திக் கூச்சலிட்டனர்.

இதனையடுத்து விமானி கட்டுப்பாட்டு அறையுடன் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது டென்னசி விமான நிலையத்தில் தரையிறங்கும்படி அறிவுறுத்தப்பட்டது.அதன்படி அந்த விமானம் அவசரமாக டென்னசி விமான நிலையத்தில் தரையிறங்கியது. அங்கு தயாராக இருந்த மீட்புக் குழுவினர் படுகாயமடைந்த 7 பயணிகளை மீட்டு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்த்தனர்.

மேலும் விமானத்தில் இருந்த பயணிகள் அனைவரும் பத்திரமாக மீட்கப்பட்டனர். பின்னர் வேறொரு விமானம் மூலம் அவர்கள் சிக்காக்கோவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தால் அங்கு சிறிதுநேரம் பரபரப்பு நிலவியது. எனினும், விமானியின் சாதுர்யத்தால் பயணிகள் அனைவரும் உயிர் தப்பினர். இதுகுறித்து விமானப் போக்குவரத்துத்துறை அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.






# பெருந்தொகை!

## ஒரே நாளில் ரூ.900 கோடி ஈர்த்தார் தமிழக முதல்வர்

அமெரிக்காவுக்குப் பயணம் செய்துள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், ஒரே நாளில் 900 கோடி ரூபா முதலீட்டுக்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புதிய தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்காவிற்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில், சன்பிரான்சிஸ்கோவில் இன்று நடந்த முதலீட்டாளர்கள் மாநாட்டில் பல நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன.

இது தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில், “சன்பிரான்சிஸ்கோவில் ஒரே நாளில் நம்பிக்கை அளிக்கும் வகையில் முதலீடுகள் கிடைத்துள்ளன. அமெரிக்காவில் ஒரே நாளில் 900 கோடி ரூபாவுக்கும் (இந்தியப் பெறுமதி) அதிகமான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இது சென்னை, மதுரை, செங்கல்பட்டு உள்ளிட்ட நகரங்களில் நானூகாயிரத்து நூறு வேலைவாய்ப்புகளுக்கு வழி வகுக்கும்.

மேலும் இரண்டு வாரங்கள் இருப்பதால் முதலீட்டை ஈர்க்கும் வேகம் தொடர்ந்து தீவிரப்படுத்தப்படும். அமெரிக்காவிலிருந்து மேலும் அதிக முதலீடுகள் தமிழ்நாட்டிற்கு ஈர்க்கப்படும். ஒரு டிரில்லியன் டொலர் பொருளாதாரத்தை நோக்கி எங்கள் பயணத்தை முன்னெடுத்துச் செல்கிறோம்.” என்றுள்ளது.






கனடா முரசு


பக்கங்கள் 09

வெள்ளிக்கிழமை 30/08/2024

## றொறன்ரோ பெரும்பாகத்தில் வீட்டு விற்பனை பெரு வீழ்ச்சி

கனடாவின் றொறன்ரோ பெரும்பாக பகுதியில் வீட்டு விற்பனை பாரிய அளவில் வீழ்ச்சி அடைந்துள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

அண்மையில் வெளியி 03




# சமூகத்தில் நாசகர செயற்பாடுகள் களையெடுக்கப்படுவது அவசியம்!

## தமிழ் One ஊடகம் மீதான நாசகாரத் தாக்குதல் குறித்து நிலைமையைத் தெளிவுபடுத்துகின்றது அந்த நிறுவனம்

**தமிழ் One ஊடகம் மீதான நாசகாரத் தாக்குதல் குறித்து நிலைமையைத் தெளிவுபடுத்தி அந்த நிறுவனம் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.**

**சமூகத்தில் நாசகர செயற்பாடுகள் களையெடுக்கப்படுவது அவசியம் என அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

**அந்த அறிக்கையின் முழு விவரம் வருமாறு:-**

SV Media நிறுவனத்தின் ஊடக நிறுவனமான தமிழ் One தொலைக்காட்சியின் ஒளிபரப்பு வாகனம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (25.08.2024) காலை அடையாளம் தெரியாத நபர்களினால் தீக்கிரையாக்கப்பட்டது.

இந்த நாசகார செயலின் பின்னணியில் இருப்பவர்கள் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையுடன், விசாரணைகளுக்கு நாம் பூரண ஒத்துழைப்பு வழங்கிவருகின்றோம்.

இந்தச் சம்பவம் குறித்து சமூகத்தில் உள்ள பலரும் எம்மோடு தொடர்பு கொண்டு எமக்கு நம்பிக்கையளிக்கும் விதத்தில் ஆறுதல் கூறினர். இந்த விடயம் குறித்து சில தவறான கருத்துக்களும் பதிவிடப்பட்டி 02





# சமூகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பதை நாம் அவதானித்தோம். எனவே கடந்தவாரம் நடைபெற்ற தமிழர் தெருவிழா தொடர்பிலான எதிர்வினைகள் குறித்தும், SV Mediaவின் நிலைப்பாடு குறித்தும் நாம் சமூகத்துக்கு தெளிவுபடுத்தவேண்டிய நிலையிலுள்ளோம். இந்த அறிக்கையின் மூலம் அதனை நாம் வெளிப்படுத்துகின்றோம்

தமிழர் தெருவிழா (Tamil Fest) நிகழ்ச்சியினை கடந்த பத்து வருடங்களாக கனடியத் தமிழர் பேரவை நடத்தி வருகின்றது. கனடியத் தமிழர் சமூகத்தில் நடைபெறும் மிகப்பெரிய விழா இதுவாகும். இந்த பிரமாண்ட நிகழ்ச்சியின் மேடை, ஒளி, ஒலி, அமைப்பு, LED Video Wall போன்ற சேவைகளை அதன் சேவை வழங்குநர்கள் வழங்குவதுண்டு. அநேகமான சேவைகளை ஆரம்பகாலத்தில் முற்று முழுதாக கனடிய நிறுவனங்கள் வழங்கின. பின்னர், இதன் ஒரு சில சேவைகளை எமது சமூகத்தைச் சார்ந்தவர்களின் நிறுவனங்கள் வழங்கிய போதிலும், இந்த நிகழ்ச்சிக்கான சேவைகளை பூரணமாக நிறைவேற்றக்கூடிய வசதிகள் அவர்களிடம் இன்மையால், அந்த சேவைகள் ஏதோ ஒரு விதத்தில் துணை ஒப்பந்தங்களாக (Subcontracts) கனடிய நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு வந்தன.

SV Media நிறுவனமானது தமிழ் One தொலைக்காட்சி சேவையை நடத்திவருவதுடன், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் பிரமாண்ட நிகழ்ச்சிகளுக்கான தயாரிப்பு சேவையை (Sound, Light, LED Wall, Power) ஆரம்பித்திருந்தது. குறுகிய காலத்திலேயே கனடிய நிறுவனங்களுக்கு நிகரான வளர்ச்சியை SV Media அடைந்திருக்கின்றமைக்கு சான்றாக, டொரோண்டோவில் நடைபெறும் அனைத்து சமூகங்களினதும் வருடாந்த பிரதான நிகழ்வுகளுக்கான தயாரிப்பு சேவைகளை SV Media நிறுவனம் வழங்கி வருகின்றமையை குறிப்பிடலாம்.

Sv Mediaவும், தமிழ் Oneம், எமது சமூக நிகழ்வுகளுக்கு எப்போதும் முக்கியத்துவம் வழங்கி வருவதனை அனைவரும் நன்கு அறிவர். ஆலய நிகழ்வுகள் மற்றும் எமது சமூகம் சார்ந்த நிகழ்வுகளுக்கு எமது தயாரிப்பு சேவைகளை மிகவும் குறைந்த கட்டணத்தில் நாம் வழங்குவதோடு, பெரும்பாலான நிகழ்வுகளுக்கு செலவுகளை மாத்திரம் பெற்றுக்கொண்டு வழங்கி வருகின்றமையை இங்கிருக்கும் பிரதான அமைப்புக்கள் எவையும் மறுக்க முடியாது.

கடந்த வருடத் தமிழர் தெருவிழா (Tamil Fest) திட்டமிடலின் போது, ஏற்பாட்டாளர்களான கனடிய தமிழர் பேரவையிடம் இந்த சேவைகளை வழங்குவதற்காக அணுகியபோது, 2023ம் வருடத்துக்கான சேவைகளை தாம் முன்னதாகவே ஒப்பந்தம் செய்துவிட்டதாகவும், அடுத்த வருடதிட்டமிடலின் போது, கவனத்தில் எடுப்பதாகவும் எமக்கு தெரிவித்திருந்தனர். அதனடிப்படையில் எமது நிறுவனத்தின் தயாரிப்பு சேவைகளை அவதானித்த தமிழர் தெருவிழா ஏற்பாட்டு குழுவினர் இந்த வருடம் தமிழர் தெருவிழாவுக்கான தயாரிப்பு சேவைகளை வழங்குமாறு, எமது நிறுவனத்திடம் பல மாதங்களுக்கு முன்னரேயே கேட்டிருந்த நிலையில், அதற்கான ஒப்பந்தமும் செய்யப்பட்டது. அதன் போது நாகரிகம் கருதியும் மனிதாபிமான அடிப்படையிலும் ஒரு சிறிய பகுதியை கடந்த வருடம் சேவையை வழங்கிய நிறுவனத்துக்கு வழங்க தமக்கு இணக்கம் தெரிவிக்குமாறு எமது நிறுவனத்திடம் வேண்டுகோளும் முன்வைக்கப்பட்டது. அந்த நிறுவனமும் எமது சமூகத்தைசார்ந்த நிறுவனம் என்பதனாலும், நாகரிகம் கருதியும் நாமும் அதற்கு இணக்கம் தெரிவித்தோம். எனினும் அந்த சேவையை வழங்குவதில் இருந்து அந்த நிறுவனம் இறுதி நேரத்தில் விலகிக்கொண்டமை வேறுவிடயம்.

இந்த நிலையில் இந்த வருட ஆரம்பத்திலிருந்து தமிழர் தெருவிழாவின் ஏற்பாட்டாளர்கள் - கனடியத் தமிழர் பேரவையின் சில செயற்பாடுகள் குறித்து சில அமைப்புகளும், செயற்பாட்டாளர்களும் விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

எமது சமூகத்தின் ஒரு கூறாக இருக்கின்ற தமிழ் One தொலைக்காட்சி இந்த விடயத்தில் இருதரப்பினரது கருத்துக்களையும் பக்கசார்பில்லாமல் வெளிக்கொண்டு வந்திருந்தது. அத்துடன் மற்றுமொருவிடயத்தையும் இங்கு பதிவு செய்யவிரும்புகின்றோம். SV Media நிறுவனமும் தமிழ் One தொலைக்காட்சியும் ஒரு நிர்வாகத்தின் கீழ் இருந்தாலும் அவை இருவேறுபட்ட தளங்களில் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் ஆகும். தமிழ் one தொலைக்காட்சி கனடிய தமிழ் சமூகத்துடன் சேர்ந்து எவ்வாறான சேவைகளை செய்துள்ளது என்பதனை சமூகம் அறியும்.

இந்த நிலையிலேயே இந்த வருடம் தமிழர் தெருவிழாவினை புறக்கணிக்க கோரும் கருத்துக்கள் சில அமைப்புக்களிடம் இருந்தும், சில செயற்பாட்டாளர்களிடமிருந்தும் வெளிவர தொடங்கியது. அதன் அடுத்த கட்டமாக தமிழர் தெருவிழாவின் அனுசரணையாளர்களை விலகிக்கொள்ளுமாறும் அழுத்தம் கொடுக்கப்பட்டது.

இந்த தயாரிப்பு பணிகளில் இருந்து SV Media விலகிக்கொள்ளவேண்டும் என எமது நிறுவனத்திடமும் கோரப்பட்டது. ஆரம்பத்தில் கோரிக்கையாக மாத்திரம் முன்வைக்கப்பட்ட போதிலும், பின்னர் அது அழுத்தமாகவும், அச்சுறுத்தலாகவும் மாறியமையையும் இங்கு நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். அத்துடன் எமது நிறுவனத்தின் சேவைகளை தாம் புறக்கணிக்கப்போவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மிரட்டல்களுக்கு அடிபணிய முடியாது என்ற போதிலும் எமக்கு மிக நெருக்கமானவர்களை வைத்து பாரிய அழுத்தம் எம்மீது பிரயோகிக்கப்பட்டமையினால், இந்த அச்சுறுத்தல்களையும், கோரிக்கைகளையும் சீர்தூக்கி பார்த்த எமது நிர்வாகம், , நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுடன் நாம் செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கமைய நிகழ்ச்சியில் இருந்து நாம் ஒருதலைப்பட்சமாக விலகிக்கொள்ளமுடிவெடுத்தால் அது சட்டரீதியான சிக்கலை ஏற்படுத்தும் என்பதனால், பொதுவான இணக்கத்துக்கு வரும் நோக்குடன், எமது நிறுவனம் தமிழர் தெருவிழாவுக்கான சேவையை வழங்க ஒப்பந்தம் செய்த சேவைகளை, ஒரு கனடிய நிறுவனத்துக்கு கைமாற்றி விடுவது எனவும், அவ்வாறு மாற்றிவிடும் போது நாம் ஏற்பாட்டாளர்களுக்கு வழங்கிய மேற்கோளை (Quotation) விட அண்ணளவாக $ 20,000அதிகமாக செலவாகும் எனவும்,அதனை இந்த அழுத்தக் குழு (pressure group) பொறுப்பேற்றால் நாம் இதில் இருந்து விலகிக்கொள்கின்றோம் எனவும் தெரிவித்தோம். அதன் பிறகு அந்த அழுத்த குழு நேரடியாக எம்மை தொடர்பு கொள்ளவில்லை என்பதுடன் இதன் விளைவுகள் விபரீதமாக இருக்கும் எனும் தொனியிலான கருத்துக்களை மாத்திரம் எம்மைச் சார்ந்தவர்களிடம் தெரிவித்திருந்தது.

இந்த பின்னணியில் நிகழ்ச்சி நெருங்கி வந்த நிலையில், முதல் நாளில் இருந்து தமிழர் தெருவிழாவின் பிரதான அனுசரணையாளர்கள், நாட்டிய, நடன குழுக்கள், இசைக்கலைஞர்கள் எனப் பலரும் நிகழ்ச்சியில் இருந்து விலகிக்கொண்டமையை ஊடகங்கள் வாயிலாக நாம் அறிந்துகொண்டோம். நிகழ்வு இடம்பெற்ற முதல் நாளில், அதிகாலையில் மேடை தயாரிப்பு பணிகளில் நாம் ஈடுபட்டிருந்தவேளையில், நிகழ்விடத்தில் அடையாளம் தெரியாத நபர்களினால் வானத்தை நோக்கி துப்பாக்கி பிரயோகமும் செய்யப்பட்டது.

எமது நிர்வாகத்தை பொறுத்தவரை தமிழ் மக்கள் ஒற்றுமையாக உளப்பூர்வமாக, ஒரு விடயத்துக்காக ஒரு நிலைப்பாட்டை எடுப்பார்களாக இருந்தால் என்ன விலை கொடுத்ததும் நாம் மக்களுக்காக நிற்போம். அதனை விடுத்து மிரட்டல்களுக்கும், பொருளாதார இழப்புகளை காட்டி மேற்கொள்ளப்படுகின்ற அழுத்தங்களுக்கும் நாம் அடிபணியப் போவதில்லை.

எமது சமூகம் இந்த புலம்பெயர்ந்த நாட்டில் பல சாதனைகளை படைத்துள்ளது. புலத்திலும், தாயகத்திலும் இன்னும் அடையவேண்டிய விடயங்கள் நிறையவே உள்ளன. மாறாக, வன்முறைச் செயற்பாடுகளூடாக சமூகத்தை மிரட்டி, உருட்டி, விடயங்களை சாதிக்க முனைந்தால் அதன் தாக்கம் எமது சமூகத்தை பல ஆண்டுகள் பின்னோக்கி தள்ளிவிடும்.

அதன் ஒரு அங்கமாகவே தமிழ் One ஒளிபரப்பு வாகனம் எரிக்கப்பட்டதை நாம் காண்கின்றோம். எமது ஒளிபரப்பு வாகனம் தமிழர் தெருவிழா நிகழ்ச்சி நடைபெற்ற இடத்துக்கு கொண்டுசெல்லப்படவில்லை, அது எமது நிறுவனத்தின் பின்னால் உள்ள வாகன தரிப்பிடத்தலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சி முடித்து எதிர்ப்புணர்வோடு, போகின்ற போக்கில் செய்த செயற்பாடாக இந்த சம்பவத்தை நம்மால் பார்க்க முடியவில்லை. இந்த நாசகார செயலில் ஈடுபட்டவர்கள், எம்மை அறிந்த, எமது நிறுவனத்தை அறிந்த எமது நிறுவனத்தின் பின்புற வாகன தரிப்பிடத்துக்கு வருவதென்றால் சில வளைவுகளை கடக்கவேண்டும், அதனையும் அறிந்தவர்களாக இருந்திருக்க வேண்டும் என்பதே எமது ஐயப்பாடாக உள்ளது.

எமது ஒளிபரப்பு வாகனம் சகல வசதிகளையும் கொண்ட ஓர் உயர் தொழிநுட்பத்துடனான ஒளிபரப்பு வாகனமாகும். எமது சமூகத்தில் மாத்திரமல்லாமல், எமது தயாரிப்பு சேவையை பெற்றுக்கொள்ளுகின்ற பிற சமூகத்தவர்களாலும் எமது இந்த ஒளிபரப்புவாகனம் குறித்து ஒரு பிரமிப்புள்ளது. அத்தகைய ஒரு நேர்த்தியான வாகனமாகும். அதனையே முற்றாக எரித்து நாசமாகியுள்ளனர் ஒரு சிலர். இந்த செயலை காப்புறுதி பணத்துக்காக நாமே செய்தோம் என கேவலமான செய்தியை காவித்திரிவது

(03ஆம் பக்கம் பார்க்க)

# கனடியத் தமிழர் பேரவைக்கு எதிரான புறக்கணிப்புக்கு நன்றி தெரிவிக்கின்றது கனடியத் தமிழர் தேசிய அவை

ஒன்ராரியோ, ஒகஸ்ட் 30

தமிழ் மக்களுக்கு எதிராகக் கனடியத் தமிழர் பேரவை இழைத்த துரோகத்திற்கு அதனை பொறுப்புடைமைக்கு உள்ளாக்கும் புறக்கணிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதாக கனடியத் தமிழர் தேசிய அவை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கனடியத் தமிழர் தேசிய அவை நேற்றைய தினம் தமது சமூக ஊடகம் வழியாக அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

கனடியத் தமிழர் பேரவைக்கு எதிரான புறக்கணிப்பு பிரசாரத்திற்கு ஆதவரளித்த அனைவருக்கும் தமிழ் கனடியர்கள் நன்றி தெரிவிக்கின்றார்கள் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் கனடியத் தமிழர் பேரவையானது தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்காக பரிந்து பேசாமல், இனப்படுகொலை செய்த இலங்கை அரசுடன் இணைந்து செயற்பட ஆரம்பித்ததாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டு முதல் கனடியத் தமிழர் பேரவை தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுத்துவரும் துரோகச் செயல்களை பேரவையானது பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளும் வரை, சம்பந்தப்பட்டவர்கள் பகிரங்கமாக பொறுப்புக் கூறும் வரை, கனடியத் தமிழர் பேரவை மற்றும் அதன் நடவடிக்கைகளை தொடர்ந்து புறக்கணிக்குமாறும் அந்த அறிக்கை கோருகின்றது.



## ரொறன்ரோ...

டப்பட்ட புதிய அறிக்கை ஒன்றில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வீட்டு விற்பனையில் ஏற்பட்டுள்ள பாரிய வீழ்ச்சியை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

கனடிய வீட்டு நிர்மாண ஒன்றியம் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதத்திற்கான வீட்டு விற்பனை முன்னொருபோதும் இல்லாத அளவிற்கு வீழ்ச்சி அடைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஜூலை மாதம் 654 புதிய வீடுகள் விற்பனை செய்யப்பட்டன ர்னவும், இது கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது 48 வீத வீழ்ச்சி எனவும், பத்தாண்டு கால சராசரியுடன் ஒப்பிடும் செய்யும்போது 70 வீத வீழ்ச்சி எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எதிர்வரும் மாதங்களில் வட்டி வீதங்கள் குறைவடையும் என்ற எதிர்பார்ப்பு காரணமாக வீட்டு விற்பனை குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதிகளவு வீடு நிரம்பல் செய்யப்பட்டிருப்பதாகவும் வீட்டு விற்பனையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சமூகத்தில்...

(02 பக்கத் தொடர்ச்சி)

வேடிக்கையாக உள்ளது - இந்த முட்டாள்தனமான செய்திக்கு பதிலளிப்பது அவசியமில்லை என்ற போதிலும், இதனை ஒரு சிலர் காவித்திரிவதால் இந்த பதிவினை செய்கின்றோம். இந்த வாகனத்தை விட, அதில் நாம் எமக்கே உரிய விதத்தில் ஒளிபரப்பு வசதிகளை செய்வதற்கு பல இலட்சம் டொலர்களையும், நேரத்தையும் செலவிட்டுள்ளோம். இதுபோன்ற ஒரு ஒளிபரப்பு வாகனத்தை பணம் இருந்தால்மட்டும் கொள்வனவு செய்யமுடியாது. இது போன்ற வாகனத்தை மீண்டும் நாம் உருவாக்க சில மாதங்கள் ஆகும்.

கனடிய வானொலி, தொலைக்காட்சி, தொலைத்தொடர்பு ஆணையகத்தின் (CRTC) கீழ் பதிவு செய்யப்பட்ட ஓர் ஊடக மாக தமிழ் one தொலைக்காட்சி உள்ளது. இதன் மீதான தாக்குதல் பொலிஸாரினால் சாதாரணமாக பார்க்கப்படமாட்டாது. பொலிஸார் பல கோணங்களில், பல மட்டங்களில் தீவிர விசாரணைகளை செய்துவருகின்றனர். இந்த நிலையில் இந்த சமூக வலைத்தளப் போலிப் புலனாய்வாளர்கள் தவறான செய்திகளை பரப்புவதும் அதனை ஒரு சிலர் காவித்திரிவதும் கூட பொலிஸாரினால் கவனத்தில் எடுக்கப்படும்.

இவ்வாறான தவறான செய்திகளும் சரி, நாசகர செயற்பாடுகளும் சரி சமூகத்தில்இருந்துகளையெடுக்கப்படவேண்டும். இந்த வாகன எரிப்பின் மூலம் அவர்கள் சொல்லவரும் செய்தி என்ன? இது இன்று எமக்கு நடந்தது நாளை யாருக்கும் நடக்கலாம். இந்த அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் சக்தி சாதாரண பொது மக்களுக்கு இல்லை. எதிர்காலம் குறித்த கோபமும், கவலையுமே மக்களுக்கு எஞ்சி இருக்கின்றது.

மக்கள் மனதில் நம்பிக்கையும் ஆறுதலும் வழங்கவேண்டிய அமைப்புகளோ தமக்குள் போட்டி போட்டு விமர்சித்துக் கொண்டிருக்கின்றன. நாம் அடையாளப்படுத்தவேண்டிய பல பிரச்சினைகள் தாயகத்திலும் இங்கும் விஸ்வரூபம் எடுத்துள்ளன. அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய ஊடகங்கள் பரபரப்புக்காக சுவாரஸ்யமான செய்திகளையும், ஊர்வம்புகளையும் ஊதி பெருப்பித்துக் கொண்டிருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் மேய்ப்பர்களாக இருப்பார்கள் என தேசிய தலைமை நம்பியவர்கள், யார் மக்களை அதிகாரம் செய்வது என்பதில் புலத்திலும், தாயகத்திலும் போட்டியிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் one தொலைக்காட்சி வாகனம் எரிக்கப்பட்டதை போன்ற வன்முறை செயற்பாடுகளை நாம் முற்றாக கண்டிக்கின்றோம். கருத்துக்கள் மூலம் செய்திகளை மக்கள் மயப்படுத்தி ஓர் ஆரோக்கியமான சமூகமாக எமது மக்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பு சகலருக்கும் உள்ளது. எனவே பொறுப்புணர்வோடு செயற்படுமாறு பொறுப்பானவர்களை நாம் விநயமாக கேட்டுக்கொள்கின்றோம். - என்று உள்ளது.




# விசிட் விசாவில் கனடா வந்தோர் இனிமேல் பணி அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாது

கனடாவுக்கு Visitor visaவில் வந்துள்ளவர்கள், இனி கனடாவிலிருந்தவண்ணம் பணி அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாது.

2020ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், கோவிட் கட்டுப்பாடுகள் காரணமாக, கனடாவுக்கு சுற்றுலா வந்தவர்கள் தங்கள் சொந்த நாடுகளுக்கு திரும்பிச் செல்ல முடியாத நிலை நிலவியதால், அவர்களுக்கு உதவும் வகையில், அவர்கள் பணி செய்ய பணி அனுமதி வழங்க அரசு ஆவன செய்தது.

ஆனால், அந்த விதி, நேற்றுடன், அதாவது, ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்துவிட்டது.

அதாவது, visitor visa பெற்று கனடாவில் தற்காலிகமாக தங்கியிருப்பவர்கள் இனி கனடாவில் பணி அனுமதிக்கு விண்ணப்பிக்கமுடியாது.

விடயம் என்னவென்றால், visitor visa பெற்று கனடாவில் தற்காலிகமாக தங்கியிருப்பவர்கள் பணி அனுமதிக்கு விண்ணப்பிக்கும் திட்டம் 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம்தான் காலாவதியாக இருந்தது.

ஆனால், தற்காலிக குடியிருப்பு அனுமதி பெற்று கனடாவில் தங்கியிருப்போரின் எண்ணிக்கையைக் குறைக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறி, கனடா புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு, அந்த திட்டத்தை திடீரென முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டது.



# மோ.சைக்கிளோட்டி விபத்தில் உயிரிழப்பு

ஒன்ராரியோ, ஓகஸ்ட் 30

கோர்ட்டிஸ் அருகே நெடுஞ்சாலை 401 இல் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் ஒருவர் விபத்தில் உயிரிழந்துள்ளார்.

நெடுஞ்சாலை 401 இலிருந்து நெடுஞ்சாலை 418 வரையிலான வளைவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்து தொடர்பில் அவசரக் குழுக்கள் மாலை 4 மணிக்கு அழைக்கப்பட்டனர். அறியப்படாத காரணங்களுக்காகமோட்டார் சைக்கிள் ஒன்று நெடுஞ்சாலையை விட்டு விலகி பள்ளத்தில் மோதி விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். அதற்கான காரணம் தெரியவரவில்லை.

ஓட்டுநர் உயிருக்கு ஆபத்தான காயங்களுக்கு ஆளாகி, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதும், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்தார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.



# பிரதமர் ட்ரூடோ விலக மாட்டார் அவரைப் பதவி நீக்க வேண்டும்!

## கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் அழைப்பு

ஒன்ராரியோ, ஒகஸ்ட் 30

கோடைகால விடுமுறையைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரும்புவதற்குத் தயாராகும் நிலையில், நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துமாறு கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் கோரியுள்ளார்.

'ஜஸ்டின் ட்ரூடோவின் மற்றொரு வேதனையான, விலையுயர்ந்த, குழப்பமான மற்றும் ஊழல் நிறைந்த ஆண்டை கனடியர்கள் தாங்க முடியாது' என்று நேற்றுக் காலை ஒட்டாவாவில் நடந்த செய்தியாளர் கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொய்லியேவ் கூறியுள்ளார்.

பிரதமர் ட்ரூடோ விலக மாட்டார் எனவும், அவரை நீக்க வேண்டும் எனவும் பொய்லியேவ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் மீண்டும் தொடங்கும் போது சிறுபான்மை அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதர்ச்வாக வாக்களிக்க புதிய ஜனநாயகக் கட்சி மற்றும் பிளாக் கியூபெகோயிஸ் ஆகிய கட்சிகளுக்கு பொய்லியேவ் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில், புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஜக்மீத் சிங்கிற்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

ஆட்சியில் உள்ள லிபரல் கட்சியுடனான ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார்.




# மார்க்கம் ரியல் எஸ்டேட் பெண் கொலை; சந்தேகநபர் ஹொங்கொங் தப்பி ஓட்டம்!

ஒன்ராரியோ, ஒகஸ்ட் 30

மார்க்கம் ரியல் எஸ்டேட் பெண் ஒருவரின் மரணம் தொடர்பிலான சந்தேகநபர் ஹொங்கொங் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மாத ஆரம்பத்தில் காணாமல் போயிருந்த யுக்-டிங் அனிடா மியி, மூன்று நாள்களின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 47 வயதான Zhixiong Marko Hu என்பவரை சந்தேகநபராக யோர்க் பிராந்திய பொலிஸார் அறிவித்துள்ளனர்.

இந்த சந்தேநபர் ஒன்ராரியோவில் இல்லை என்பதனால், அவருக்கு நாடாளவிய பிடிவாறந்து பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.




# ஆயுதக் குற்றங்களுக்காக இரண்டு பேருக்குச் சிறை

அல்பேர்ட்டா, ஒகஸ்ட் 30

2022 ஆம் ஆண்டு அல்டாவின் கவுட்ஸில் நடந்த எல்லை முற்றுகையின் போது ஆயுதக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்ட இரண்டு ஆண்கள் ஒன்பது ஆண்டுகள் சிறையில் இருக்க வேண்டும் என்று ஒரு அரச சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

ஆனால் குற்றம் சுமத்தப்பட்டவர்கள் ஏற்கனவே கம்பிகளுக்குப் பின்னால் போதுமான நேரத்தை செலவிட்டு விட்டனர் எனக் குற்றவாளி தரப்பு சட்டத்தரணிகள் தெரிவித்துள்ளனர்.

அந்தோனி ஒலினிக் மற்றும் கிறிஸ் கார்பர்ட் ஆகியோர் இந்த மாத தொடக்கத்தில் 5,000 டொலருக்கும் அதிகமான பொது அமைதிக்கு ஆபத்தான வகையில் துப்பாக்கியை வைத்திருந்தமைக்காகக் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டனர்.

அவர்கள் மீது ஒலியெனிக் பைப் வெடிகுண்டு வைத்திருந்தமைக்காகவும் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

ஒரு நடுவர் மன்றம் அவர்கள் எதிர்கொண்ட மிகக் கடுமையான குற்றச்சாட்டான பொலிஸ் அதிகாரிகளை கொலை செய்ய சதி என்பதில், அவர்கள் குற்றவாளிகள் அல்லர் என்று கண்டறிந்தது.




# ஆயுத குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 32 பேர் கைது

## டர்ஹம் பொலிஸார் நடவடிக்கை

கனடாவில் பல்வேறு ஆயுத குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 32 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

டர்ஹம் பொலிஸார் இந்தச் சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.

கடந்த ஆறு மாத காலமாக இந்த குற்றவாளிக் கும்பல் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து 16 ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த 32 பேருக்கு எதிராகவும் 184 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என டர்ஹம் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோதமான ஆயுதக் கடத்தல், போதைப் பொருள் கடத்தல், மோசடி சம்பவங்களுடன் இந்தக் கும்பல் தொடர்புபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்கள் தொடர்பிலான விசாரணைகள் தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# எட்டோபிகோக் இரட்டைக் கொலையின் சூத்திரதாரி மிசிசாகாவில் எனத் தேடுதல்!



ஒன்ராரியோ, ஓகஸ்ட் 30


எட்டோபிகோக்கில் தனது பெண் உறவினர்களின் மரணத்தில் தேடப்படும் 33 வயது சந்தேக நபர் மிசிசாகாவில் இருக்கலாம் என்று பீல் பிராந்திய பொலிஸார் கூறியுள்ளனர்.

சமூக ஊடகங்களில் நேற்றைய தினம் வெளியிட்ட பதிவில், ஜோசப் அயாலா டிக்ஸி சாலை மற்றும் லேக் ஷோர் சாலை கிழக்கு பகுதியில் இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாரிகள் தற்போது சந்தேகநபரைத் தேடி வருகின்றனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

ஒரு வாரத்திற்கு முன்பு சில்வர் கிரெஸ்ட் அவென்யூவில் உள்ள ஒரு வீட்டிற்குள் 82 மற்றும் 60 வயதுடைய இரண்டு பெண்கள் இறந்து கிடந்ததை அடுத்து, அயலா இரண்டு இரண்டாம் நிலை கொலைகளுக்காக தேடப்பட்டு வருகின்றார்.

பலியானவர்கள் அயலாவின் உறவினர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.




# கைபேசி தடை அடுத்த வாரம் தொடக்கம் ஒன்றாரியோ மாகாணப் பாடசாலைகளில்!

## விழிப்புணர்வு விளம்பரப் பிரசாரம் ஆரம்பம்

ஒன்றாரியோ, ஓகஸ்ட் 30

அடுத்த வாரம் வகுப்புகள் மீண்டும் தொடங்கும் போது நடைமுறைக்கு வரும் புதிய கைபேசி தடை குறித்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக ஒன்றாரியோ மாகாண அரசாங்கம் விளம்பரப் பிரசாரத்தை ஆரம்பித்துள்ளது.

வரும் கல்வியாண்டில், மழலையர் பள்ளி முதல் 6 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்கள், கல்வியாளரால் அனுமதிக்கப்படாவிட்டால், நாள் முழுவதும் தங்கள் கைபேசிகளை அமைதியாகவும், பார்வைக்கு வெளியேயும் வைத்திருக்கும்படி கேட்கப்படுவார்கள்.

7 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் பாடசாலை வளாகத்தில், வகுப்பு நேரத்திற்கு வெளியே மாத்திரமே கைபேசிகளைப் பயன்படுத்த அனுமதிக்கப்படுவார்கள்.

'இது ஒரு புதிய முயற்சி' என்று மாகாணத்தின் புதிய கல்வி அமைச்சர் ஜில் டன்லப் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போது கூறினார்,

இந்த இலையுதிர்காலத்தில் ஒன்றாறியோவின் பொதுப் பாடசாலைகளில் வரவிருக்கும் பல மாற்றங்கள் குறித்து இதன்போது அவர் கருத்து வெளியிட்டார்.

'ஆசிரியர் கைபேசிகளை வைக்க அல்லது அணைக்கச் சொன்னால், மாணவர்கள் அந்த விதிகளுக்கு இணங்க வில்லை என்றால், வகுப்பறையில் பாதுகாப்பான இடத்தில் கைபேசியை வைக்கும்படி கேட்கப்படுவார்கள். மாணவர்கள் அதைப் பின்பற்றவில்லை என்றால், அவர்கள் அதிபரின் அலுவலகத்திற்குச் செல்லுமாறு கேட்கப்படுவார்கள்' என அமைச்சர் டன்லப் தெரிவித்தார்.






# மொன்றியாலில் சிறுவனை கடத்த முயன்ற பெண்கள்

கனடாவின் மொன்றியால் புறநகர் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை ஐந்து வயதான சிறுவன் ஒருவனை இரண்டு பெண்கள் கடத்தினர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

65 மற்றும் 48 வயதான இரண்டு பெண்கள் இந்தக் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புபட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சிறுவனை கனடாவில் இருந்து வெளிநாடு ஒன்றுக்குக் கடத்திச் செல்ல முயற்சிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸ் விசாரணைகள் மூலம் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

14 வயதிற்கும் உட்பட்ட பிள்ளைகளை அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் அனுமதி இன்றி அழைத்துச் செல்வது கடத்தல் குற்றமாகவே கருதப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.




# மொன்றியலில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பரிதாபமாக உயிரிழப்பு

கனடாவின் மொன்றியலில் செயின்ட் லின் லாரன்ஸ் என்ற இடத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 50 வயதான ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

குயில்பெல்ட் வீதியில் துப்பாக்கிச் சூட்டு சத்தம் கேட்டதாக பொலிஸாருக் குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு பொலிஸார் விரைந்துள்ளனர்.

இதன் போது நபர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டு காயங்களுக்கு இலக்காகி கிடந்தார் எனவும் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டார் எனவும் அவரை வைத்தியசாலையில் சேர்த்தனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம் பெற்ற சில நொடிகளில் அந்த இடத்திலிருந்து நபர் ஒருவர் வாகனத்தில் தப்பி செல்வதைக் கண்டனர் என உயிரிழந்தவரின் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# கனடாவின் தபால் திணைக்களம் பாரியளவில் நிதி நெருக்கடியில்!




கனடாவின் தபால் திணைக்களம் பாரியளவில் நிதி நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு போதிய அளவு நிதி வசதி கிடையாது என அது தெரிவித்துள்ளது.

திணைக்களத்தின் பணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினர் மிகவும் நெருக்கடியான நிலையில் நிறுவனம் காணப்படுவதாக தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற ஆண்டு பொதுக்கூட்டத்தில் இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

கனடிய தபால் திணைக்களத்தை நடத்திச் செல்வதற்கு அடிப்படை ரீதியான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் தபால் விநியோகத்தை சீராக முன்னெடுப்பதற்கு சில மாற்றங்களை செய்ய வேண்டும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கோவிட் காலத்தில் இணைய வழியிலான கொள்வனவு முறைமை அதிக அளவில் பயன்படுத்தப்பட்டதுடன் அதி உயர்தொழில்நுட்பம்பயன்படுத்தப்பட்டது.

இவ்வாறான ஒரு பின்னணியில் கனடிய தபால் திணைக்களம் பல் வேறு சவால்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக பொதிகள் அனுப்பி வைத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு மக்கள் தபால் திணைக்களத்தை தவிர்த்து வேறு நிறுவனங்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளத் தொடங்கியுள்ளனர் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இரண்டு தசாப்த இடைவெளியில் 5.5 பில்லியன் கடிதங்களை விநியோகம் செய்த தபால் திணைக்களம் தற்பொழுது இரண்டு பில்லியன் கடிதங்களை விநியோகம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முதல் காலாண்டு பகுதியில் 76 மில்லியன் டொலர்கள் நட்டத்தை எதிர் நோக்கிய கனடிய தபால் திணைக்களம் இரண்டாம் காலாண்டில் 46 மில்லியன் வருமானத்தை ஈட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வருமானம் வேறு துணை நிறுவனத்தின் ஊடாக லாபமாக ஈட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.








# கனடாவில் சீக்கிய சமூக ஆர்வலரினுடைய உயிருக்கு அச்சுறுத்தல் என்று எச்சரிக்கை

கனடாவில் கொல்லப்பட்ட சீக்கிய தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜர் முன்னெடுத்துவந்த வாக்கெடுப்பு பிரச்சாரத்தை தற்போது நடத்திவரும் சமூக ஆர்வலரின் உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

ஒன்றாரியோவின் பிராம்டனில் குடியிருந்து வருபவர் சமூக ஆர்வலராக இந்தர்ஜித் சிங் கோசல். இவரை வெள்ளிக்கிழமை நள்ளிரவு கடந்த நிலையில் ஒன்ராறியோ மாகாண பொலிசார் நேரிடையாக சென்று எச்சரித்துள்ளனர்.

அவரது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதை உறுதி செய்துள்ள அதிகாரிகள் நேரிடையாக சென்று எச்சரித்துள்ளனர் எனக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் பொலிஸார் அவரது குடியிருப்புக்கு சென்ற போது அவர் அங்கே இல்லை என்பதால், அலைபேசியில் தொடர்புகொண்டு எச்சரித்துள்ளனர்.

மேலும் எச்சரிக்கையுடன் இருக்கவும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் சம்பவம் நடந்தால் பொலிஸாரை நாடவும் அவர்கள் கோரியுள்ளனர். இந்த விவகாரம் தம்மை அதிர்ச்சியில் ஆழ்த்தியதாக கோசல் தெரிவித்துள்ளார்.

35 வயதான இந்தர்ஜித் சிங் கோசல், இந்தியாவின் சீக்கியர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பஞ்சாப் மாநிலத்தை இரண்டாக பிரித்து காலிஸ்தான் சுதந்திரம் தொடர்பாக கனடா முழுவதும் நடத்தப்பட்ட வாக்கெடுப்பின் ஒருங்கிணைப்பாளராக உள்ளார்.

கடந்த ஆண்டு பிரிட்டிஷ் கொலம்பியாவின் சர்ரே பகுதியில் ஹர்தீப் சிங் நிஜ்ஜர் படுகொலை செய்யப்பட்ட நிலையில், ஒருங்கிணைப்பாளர் பொறுப்பை கோசல் ஏற்றெடுத்துள்ளார்.ஹர்தீப் சிங் நிஜ்ஜர் படுகொலையில் இந்திய அரசாங்கத்திற்கு நேரிடையான தொடர்பிருப்பதாக 2023 ஜூன் 18 ஆம் திகதி கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டினார்.

காலிஸ்தான் பிரிவினைக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துவரும் இந்திய அரசாங்கம், நிஜ்ஜரை தீவிரவாதி என அடையாளப்படுத்தியது. இந்த நிலையில், தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படக் காரணம் இந்தியா என்றே தாம் நம்புவதாக கோசல் தெரிவித்துள்ளார்.

கனடாவில் சீக்கியர்களை ஒருங்கிணைப்பதில் இந்தியாவுக்கு என்ன சிக்கல் என கேள்வி எழுப்பியுள்ள கோசல், கனடா போன்ற ஓர் அழகான நாட்டில் தாம் பாதுகாப்பாக இருப்பேன் என்றே நம்புகிறார் எனத் தெரிவித்துள்ளார்.